அங்கு இருக்கிற நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 346, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

346—

புதிய பாலம்

***52040—திரு. செ. காமராஜ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர்—குலத்தூர் நெடுஞ்சாலையில் புதிய பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடவூர்—குலத்தூர் நெடுஞ்சாலையில் புதிய பாலம் கட்டும் கருத்துரு ஏதும் அரசின் பரிசிலனையில் தற்போது இல்லையென்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையமாக உள்ள பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலே உள்ள வடக்குப் பிச்சாவரத்தையும், தெற்குப் பிச்சாவரத்தையும் இணைத்துப் புதிய பாலம் கட்ட*

வேண்டுமென்கிற கோரிக்கையை ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு மேலாக அந்த மக்கள் கோரி வருகிறார்கள். இந்தப் பாலம் இல்லாத காரணத்தினால் பரங்கிப்பேட்டை ஒன்றிய அலுவலகத்திற்கு வருகிற மக்கள் மற்றும் அதிகாரிகள் 22 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டிய அவசியம் இருக்கிறது. அதேபோல அம்புபுதியபாளையத்தையும், கிள்ளை பிரதான சாலையையும் இணைப்பதற்குப் பாலம் கட்டித் தரப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் காலத்திலே வாக்குறுதி அளித்தார்கள். எனவே, இந்தப் பாலங்களை இப்போதாவது கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நான்காண்டுக் காலத்திலே நபார்டு திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 417 பாலங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதிகளிலே பாலங்கள் அமைப்பதற்கு ஆய்வு செய்யப்பட்டு, நடப்பாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலே 3 பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 2015—2016 ஆம் ஆண்டிலே 24.14 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டங்கள் வாயிலாக நடராஜபுரம், உப்பனாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு 2015—2016 ஆம் ஆண்டுத் திட்டத்தின்கீழ் 10 கோடியே 6 இலட்சம் ரூபாயும், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் குன்டியமல்லூர் வாய்க்கால் பகுதியிலே ஓர் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு 8 கோடியே 62 இலட்சம் ரூபாயும், தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் சிதம்பரம் அருகில், செட்டிமுட்டு பகுதியில் பணி துவங்குவதற்காக 5

கோடியே 46 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் அனுமதி கேட்டு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சட்டமன்றத் தொகுதியில் 2015–2016 ஆம் ஆண்டில் மட்டும் 3 பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் இப்பொழுது குறிப்பிடுகின்ற அந்தப் பாலங்கள் அமைப்பதற்கு நடப்பாண்டிலே நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. இதனால் விபத்துகள் நடைபெற்று உயிர் பலிகளும் ஏற்படுகின்றன. இதைத் தவிர்ப்பதற்காக குடியாத்தம், கவுண்டன்ய ஆற்றின் கரைமீது ஒரு மாற்றுப் பாதை அமைக்கப்படுமா? தற்போது அமைய இருக்கின்ற தேசிய நெடுஞ்சாலை இந்தப் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு அதிகமாகப் பயன்படாது. 2011 ஆம் ஆண்டு முதல் நான் இந்தக் கோரிக்கையை வைத்து வருகிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கனிவுடன் பரிசீலித்து, இந்த மாற்றுப் பாதையை கவுண்டன்ய ஆற்றின் கரைமீது அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் புறவழிச் சாலையை அமைப்பதற்கு அறிவிப்புச் செய்துகொண்டிருக்கின்றார்கள். எல்லாப் பகுதிகளிலுமே படிப்படியாக நிதிநிலைக்கேற்ப புறவழிச் சாலை அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கின்றார்கள். அதன்*

அடிப்படையிலே குடியாத்தம் புறவழிச் சாலையானது 7.70 கிலோ மீட்டர் நீளத்தில் தேசிய நெடுஞ்சாலை அலகின்மூலம், தேசிய நெடுஞ்சாலை எண் 234-ல் மங்களூர்-விழுப்புரம் சாலையில், நெல்லூர்பேட்டை ஏரிக் கரையில் கிலோ மீட்டர் 23/5-ல் ஆரம்பித்து சேத்துவண்டை கிலோ மீட்டர் 29/4 வரை அமைக்கப்படவுள்ளது. தற்போது இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு ஆண்டுத் திட்டம் 2015-2016-ன்கீழ் ரூபாய் 80 இலட்சத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கான திட்ட அறிக்கை விரைவில் மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அனுமதி பெறப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மதுராந்தகம் தொகுதி, கருங்குழி பேரூராட்சியில் உள்ள மலைப்பாளையம் கிராமத்தில் நெடுஞ்சாலை போகும் வழியில் ஒரு குறுகிய பாலம் உள்ளது. இதனால் அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. எனவே, அந்தப் பாலத்தை அகலப்படுத்தி தருவார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட அளவு பாலப் பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபிறகு, 2011-2012 ஆம் ஆண்டு 65 பாலங்கள், 2012-2013 ஆம் ஆண்டு 121 பாலங்கள், 2013-2014 ஆம் ஆண்டு 131 பாலங்கள், 2014-2015 ஆம் ஆண்டு 100 பாலங்கள், 2015-2016 ஆம் ஆண்டு 56 பாலங்கள் என மொத்தம் 473 பாலங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு இரயில்வே துறையோடு*

இணைந்து மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் 2011–2012–ல் 21 பாலங்களும், 2012–2013–ல் 12 பாலங்களும், 2013–2014–ல் 19 பாலங்களும், 2014–2015–ல் ஒரு பாலமும் கட்டப்பட்டுள்ளன. வருகின்ற 2015–2016 ஆம் ஆண்டுக்கான பணிகள் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே, கடந்த 4 ஆண்டுக் காலத்தில் இரயில்வே மேம்பாலம், கீழ்ப்பாலம் மட்டும் 53 பாலங்களை தமிழ்நாட்டிலே கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆணையிட்டிருக்கின்றது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான் 1,286 பாலங்கள், 2,391 கோடியே 91 இலட்சம் ரூபாயில் பல்வேறு அலகுகளின்கீழ் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ள பாலத்தினை அகலப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லியில் கரையான்சாவடி, குமணன்சாவடி புறவழிச் சாலைக்கு இடையில் சிறைச்சாலை, பேருந்து நிலையம் இருக்கின்ற பழைய சாலையில் ஏராளமான கல்லூரிப் பேருந்துகள், தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டிய தொழிற்சாலைப் பேருந்துகள் செல்கின்றன. காஞ்சிபுரம் வரை ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. மாணவ, மாணவியர், தொழிலாளர்களை ஏற்றிச் செல்வதற்காக ஏராளமான lift பேருந்துகள் அந்தச் சாலையில் செல்கின்றன. தற்போது அங்கே கடுமையான போக்குவரத்து நெரிசல் இருப்பதாகச் சொல்லி, அனைவரும் இனி புறவழிச் சாலைக்குச் சென்று அங்குதான் பேருந்துகளில் ஏற வேண்டும் என்று சொல்லிவிட்டார்கள்.*

பேருந்துகளையும் திருப்பி விட்டார்கள். ஆகவே, மக்கள் அதிகமாக வாழக்கூடிய இந்தப் பகுதியிலிருந்து புறவழிச் சாலைக்கு 1 கி.மீ. அல்லது 1½ கி.மீ. தூரம் வரை நடந்து சென்று, பேருந்தில் ஏற வேண்டியிருக்கின்றது. இது சமீபத்தில் ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினை. ஏற்கெனவே அந்த பூந்தமல்லி சாலையை அகலப்படுத்துவதற்கான குறியீடுகள் செய்யப்பட்டுவிட்டன. மார்க்கிங் செய்யப்பட்டுவிட்டன. சாலையினை அகலப்படுத்தினால் இந்தப் பிரச்சினை தீரும். எனவே, இச்சாலையினை அகலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், குறிப்பிட்ட சாலையானது குறுகலாகவும், போக்குவரத்து நெரிசல் நிறைந்ததாகவும் இருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஆய்வு செய்து, போக்குவரத்து செறிவின் அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

347—

அங்கன்வாடிக் கட்டடம்

***57774—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—